1995 ஏப்ரல் 21]

இருந்தாலும், அவைகளை கொஞ்சம் தளர்த்தி இந்த கொல்லிமலையை தனி வட்டமாக இந்த ஆண்டிலேயே அறிவிக்க முழு முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னபடி மலைவாசி மக்கள் மீது ஒரு தனி கண், சிறப்புக் கண் வைத்துள்ளது இந்த அரசு. அதை எண்ணிப்பார்த்து, அவைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஆனால் இந்த ஆண்டே முடியுமா என்றால், அதை இந்த ஆண்டு முடிப்பதற்கு சங்கடமாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, ஆனால் எந்த அளவுக்கு ஆதரவாக செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 382, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

382—

அரசு மருத்துவமனைகளுக்கு மருந்துகள் வழங்குதல்

36023*—திரு இரா. அப்பு நடேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் போதிய அளவு இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மருந்து இல்லாத குறையைப் போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் தேவையான உயிர்காக்கும் மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தற்போது போதுமான அளவுக்கு கையிருப்பில் உள்ளன.

[1995 ஏப்ரல் 21

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டம், ஏழையெளிய மக்கள், மலைவாழ் மக்கள் நிறைந்த மாவட்டம். கடல் பகுதி நிறைந்த மாவட்டம். அங்கே ஏழையெளியவர்கள்தான் நிறைய இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் அரசாங்க மருத்துவமனை ஒன்றுதான் தஞ்சமாக இருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னாலே அங்கே சென்றபொழுது அத்தியாவசிய மருந்துகள் சில இல்லாமல் இருந்தது. தற்போது மருந்துகள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதற்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். அதேபோல, குலசேகரத்தில் மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அந்த மருத்துவமனையிலும் தட்டுப்பாடு இல்லாமல் தேவைக்கேற்ப மருந்துகள் கிடைக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன, குறிப்பிட்ட அந்த மருத்துவமனை மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இருக்கின்ற அத்தனை மருத்துவமனைகளிலும் தேவையான மருந்துகள் இருக்க வேண்டும் என்ற நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது. நான் ஏற்கனவே, என்னுடைய டிமாண்டிலே சொன்னதைப்போல, இதற்கு முன்னாலே இருந்த முறையிலே மருந்துகள் வாங்கி விநியோகிப்பதில் நிறைய சிக்கல்களும், இடர்பாடுகளும் இருந்தன. அதைக் கண்காணிப்பதற்குச் சரியான, முறையான அமைப்பு இல்லாமல் இருந்தது. இப்போது அதற்காக தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு தனி கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு, இப்போது அந்த கார்ப்பரேஷன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 225 வகையான மருந்துகள் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மருத்துவமனைகளுக்குச் சென்றடைகிற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து இந்த நடவடிக்கையை எடுத்து, இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு, அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி கூறிக் கொண்டு, இதுபோன்று எப்போதுமே

1995 ஏப்ரல் 21]

தட்டுப்பாடு இல்லாமல் எங்கள் மாவட்டத்தைக் கவனிக்க வேண்டும். காரணம், இதற்கு முன்னாலே எல்லாம் கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு இருந்தது. புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு என்ன என்ன தேவை என்று அறிந்த உடனேயே செய்து கொடுக்கின்றார்கள். ஆகையால், அந்த ஏழையெளிய மக்களுக்கு இதுபோன்று உதவிகளைச் செய்து கொடுப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 383, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கு. சிவசுப்பிரமணியன் கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

383—

திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

**38552—திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொற்கால ஆட்சியில் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது திருக்கோவிலூரில் உள்ள அரசு மருத்துவமனை நல்ல நிலையில் இருந்தாலும்கூட, அதை